**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 24/2012**

**வழக்கு சாட்சி – அ.சா.10.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேது | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | ராமசாமி | தொழில் | பணி ஓய்வு |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:–</u>

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடைசியாக திருநெல்வேலி மாவட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்துவிட்டு தற்போது பணி ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 10.12.2008 ம் தேதி தேனி மாவட்ட குற்ற பிரிவு ஆய்வாளராக பணியாற்றியபோது தேனி மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண் 23/2007 U/s.416, 464, 471, 420 IPC வழக்கின் கோப்பினை பார்வையிட்டு என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 09.01.2009 ம் தேதி இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் 1)மோகன், 2) சுந்தரபாண்டியன், 3) தியாகராஜன், 4) குணசேகரன், 5) ராமசாமி, 6) வர்கீஸ் ஆகியோர்களை விசாரணை செய்தபோது ஏற்கனவே இவ்வழக்கை விசாரணை செய்த விசாரணை அதிகாரிகளிடம் கூறியதுபோல் எனது விசாரணையிலும் கூறியதால் நான் அவர்களது வாக்குமூலத்தை தனியாக வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை. கடந்த 13.03.2009 ம் தேதி சாட்சி பரதன், தேவதானப்பட்டி கிராம நிர்வாக அலுவலர், அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 02.04.2009 ம் தேதி சாட்சிகள் 1) சிவக்குமார், 2) மகேஸன், 3) சேகர் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 18.04.2009 ம் தேதி வழக்கு சம்மந்தமாக

ஆவணங்களை சரிபார்த்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் எதிரிகள் மீது இதச 416, 419, 464, 471, 420 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மார்ச் 2003ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No.0435168 அது அசாஆ.11 ஆகும். செப்டம்பர் 2003ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No.0867776 அது அசாஆ.12 ஆகும்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கிராம நிர்வாக அலுவலரான பரதன் என்பவரை நான் விசாரித்தபோது அவர் அவரது விசாரணையில் 1வது எதிரி தற்சமயம் அவரது முகவரியில் இல்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 1வது எதிரி கீழபூலாநந்தபுரத்தில் குடியிருப்பதற்காக அந்த கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் சேலம் மாவட்டத்தில் உள்ள செண்ட் மேரிஸ் பள்ளிக்கும், தேனி மாவட்டம் சீலையம்பட்டியில் உள்ள இந்து நடுநிலை பள்ளிகளுக்கும் அவர் அனுப்பிய கடிதம் மற்றும் அந்த கடித்திற்கு கிடைக்கப்பெற்ற பதில்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அசா2 அவரது நீதிமன்ற விசாரணையில் என்.ராஜா என்பவரை விசாரித்தாக கூறியுள்ள நபரை நான் தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி போலி முத்திரைகள் தயார் செய்ததாக சொல்லப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் போலியான கையொப்பம் இட்டதாகவும், சொல்லப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி போலி முத்திரை மற்றும் போலி கையொப்பம் குறித்து நான் உரிய வகையில் போலி என்று சொல்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். ஆள்மாறாட்டம் செய்த நபரை பற்றி நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவங்கள் அனைத்தும் கம்பம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். அந்த கம்பம் அரசினர் மேல் நிலை பள்ளியில் நான் யாரையும் விசாரிக்கவில்லை என்று

சொன்னால் சரியல்ல. 1வது எதிரி கே.டி.சி டுட்டோரியல் கல்லூரியில் படித்ததாக சொல்லப்படுவதற்கு நான் யாரையும் விசாரிக்கவோ, ஆவணம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கே.டி.சி டுட்டோரியல் கல்லூரி சின்னமன்னூரில் இருந்ததற்கான சாட்சிகள் யாரையும் விசாரிக்கவோ, ஆவணம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி சிவக்குமார் எனது விசாரணையில் அவருக்கு சொந்தமான வீட்டில்தான் 3வது எதிரி குடியிருந்தாக கூறவில்லை, ஆனால் அவர் குடியிருக்கும் காம்பவுண்டுக்குள் குடியிருப்பதாக கூறியுள்ளார். கர்நாடக மாநிலத்திற்கு சென்று சாட்சிகள் விசாரித்தது சம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்குத்தான் தெரியும். அது சம்மந்தமாக ஆவணங்களை பார்வையிட்டால் என்னால் கூறமுடியும். இவ்வழக்கில் இறந்துபோன 3வது எதிரி கண்ணன் கம்பம் காயத்திரி மெட்ரிகுலேசன் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்ததற்காக யாரையும் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் 1ம் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி யாரையும், ஆள்மாறட்டம் செய்யவில்லை என்றாலும், அதேபோல் எந்தவித போலியாணவங்கள் எதையும் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசா1 புள்ளி விபர கணக்கிற்காக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் முதல் பக்கத்தில் 3வது காலத்தில் குற்ற நிகழ்வு நாள் மார்ச் மாதம் 2003ம் வருடம் என்றும், புகார் கொடுக்கப்பட்டது 12.01.2007ம் வருடம் என்று சொன்னால் சரிதான். இடைப்பட்ட கால தாமதத்திற்கு உரிய காரணம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. காரணம் அரசு அலுவல் சார்ந்து கடித போக்கவரத்தால் ஏற்பட்டதாகும். புகார் கிடைக்கப்பெற்ற தேதியில் இருந்து சுமார் 7 மாதம் கழித்துதான் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் 2 வது எதிரிதான் தேர்வு எழுதியதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்யையின் இரண்டாவது பக்கத்தில் காலம் எண் 14 ல் புகார் கொடுத்த நபரிடம் கையொப்பம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் சில நேரங்களில் முதல் தகவல் அறிக்கை தபால் மூலமாக மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு தபாலில் அனுப்பிறதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது எதிரிதான் தேர்வு எழுதினார் என்று எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரி எந்த ஒரு தேர்வும் எழுதவில்லை என்றாலும், சம்பவ காலகட்டத்தில் 8 ம் வகுப்பு படித்து வந்தார் என்றாலும், இந்த குற்ற சம்பவத்திற்கும் அவருக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றாலும், நான் தவறுதலாக இரண்டாவது எதிரியை சேர்த்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.